# FIRE SAFETY IN THE HOME

# வீட்டில் தீயபாயப் பாதுகாப்பு

FIRE KILLS
YOU CAN PREVENT IT

TAMIL




## Did you know...?

- You're four times more likely to die in a fire if you don't have a smoke alarm that works.
- Around half of home fires are caused by cooking accidents.
- Two fires a day are started by candles.
- Every six days someone dies from a fire caused by a cigarette.
- About two fires a day are started by heaters.
- Faulty electrics (appliances, wiring and overloaded sockets) cause around 6,000 fires in the home across the country every year.

## உங்களுக்குத் தெரியுமா?

- இயங்கும் நிலையில் உள்ள புகை அலாரம் ஒன்று உங்களிடம் இல்லையென்றால், தீயில் இறக்கும் சாத்தியம் உங்களுக்கு நான்கு மடங்கு அதிகமாக இருக்கும்.
- வீட்டில் ஏற்படும் தீவிபத்துக்களில் ஏறக்குறையப் பாதி சமையல் செய்யும்போது ஏற்படுபவையாகும்.
- நாளொன்றுக்கு இரண்டு தீவிபத்துக்கள் மெழுகுவர்த்தியால் ஏற்படுகின்றன.
- ஆறு நாட்களுக்கு ஒருவர் சிகரெட்டால் ஏற்படும் தீவிபத்தில் உயிரிழக்கிறார்.
- நாளொன்றுக்கு சுமார் இரண்டு தீவிபத்துக்கள் சூடேற்றிகளால் ஏற்படுகின்றன.
- ஒவ்வோர் ஆண்டும் பழுதுபட்ட மின்சார சாதனங்களால் (உபகரணங்கள், மின்வயர் இணைப்புக்கள் மற்றும் பளு கூடிய மின்குழிவுகள் (சொக்கெட்டுக்கள்)) ஏறக்குறைய 6,000 தீவிபத்துக்கள் நாடு பரவலாக வீட்டில் ஏற்படுகின்றன.

# PROTECT YOUR HOME WITH SMOKE ALARMS



உங்கள் வீட்டை புகை அலாரங்கள் கொண்டு பாதுகாக்கவும்

**The easiest way to protect your home and family from fire is with working smoke alarms.**

**Get them. Install them. Test them. They could save your life.**

உங்கள் வீட்டையும் குடும்பத்தையும் பாதுகாத்துக்கொள்ளும் மிகச் சுலபமான வழி இயங்கும் நிலையில் உள்ள புகை அலாரங்களைப் பொருத்துவதே.

அவற்றைப் பெறுங்கள். அவற்றைப் பொருத்துங்கள். அவற்றைப் பரீட்சியுங்கள். அவற்றால் உங்கள் உயிரைப் பாதுகாக்க முடியும்.



## Choosing your smoke alarms

## உங்கள் புகை அலாரங்களைத் தெரிவு செய்தல்

- Fit at least one smoke alarm on every level of your home.
- Smoke alarms are cheap and easy to install.
- They are available from DIY stores, electrical shops and most high street supermarkets.
- There are a variety of different models to choose from. Your local fire and rescue service will be happy to give you advice on which one is best suited for you.
- Ten-year sealed battery smoke alarms are the best option. They are slightly more expensive, but you save on the cost of replacing batteries.
- Look out for one of these symbols, which shows the alarm is approved and safe.

- உங்கள் வீட்டின் ஒவ்வொரு தளத்திலும் குறைந்தது ஒரு புகை அலாரத்தையாவது பொருத்தவும்.
- புகை அலாரங்கள் மலிவானவை. அத்துடன் பொருத்துவதற்கு இலகுவானவை.
- அவை 'நீங்களே செய்து பாருங்கள்' கடைகள், மின்சாரப் பொருள் கடைகள் மற்றும் பெரும்பாலான பெருஞ்சந்தைகளில் (சூப்பர்மார்க்கெட்டுக்கள்) கிடைக்கும்.
- தெரிவு செய்வதற்குப் பலவகை மாதிரிகள் உள்ளன. உங்களுக்கு மிகப் பொருத்தமானது எது என்று ஆலோசனை தருவதில் உங்கள் உள்ளூர் தீயணைப்பு மற்றும் மீட்புச் சேவையினர் மகிழ்ச்சி அடைவார்கள்.
- பத்து ஆண்டுகளுக்கு சீலிடப்பட்ட மின்கலம் கொண்ட புகை அலாரங்கள் மிகச் சிறந்த தெரிவாகும். அவை சற்றே விலை கூடியவை. ஆனால் மின்கலங்களை மாற்றீடு செய்யும் செலவு மீதப்படும்.
- இந்த இலச்சினைகளில் ஒன்று உள்ளதா என்று கவனிக்கவும். அலாரம் அங்கீகரிக்கப்பட்டது மற்றும் பாதுகாப்பானது என அது காட்டும்.

### Top tip
### சிறந்த உதவிக் குறிப்பு



**Fit smoke alarms**

**புகை அலாரங்களைப் பொருத்துங்கள்**

British Standard Kitemark

LPCB




ஓர் இயங்கும் புகை அலாரத்தால் உங்கள் உயிரைப் பாதுகாக்க முடியும்

# How to make sure your smoke alarms work

**Test your smoke alarms at least monthly.**

- If any of your smoke alarms have a one year battery, make sure it is changed every year. Only take the battery out when you need to replace it.
- Never disconnect or take the batteries out of your alarm if it goes off by mistake.
- Standard battery operated alarms are the cheapest option, but the batteries need to be replaced every year.
- A lot of people forget to test the batteries, so longer life batteries are better.
- Mains-powered alarms are powered by your home power supply. They need to be installed by a qualified electrician, but like battery alarms, they do require testing.
- Testing smoke alarms tests the smoke sensor as well as the power supply and/or battery.
- You can even have linked alarms installed, so that when one alarm detects a fire they all go off together. This is useful if you live in a large house or over several levels.

Strobe light and vibrating-pad alarms are available for those who are deaf or hard of hearing. Contact the Action on Hearing Loss Information Line on **0808 808 0123** or textphone **0808 808 9000**.

# உங்கள் புகை அலாரங்கள் இயங்குவதை எப்படி நிச்சயப்படுத்துவது

**குறைந்தது மாதத்துக்கு ஒரு தடவையாவது உங்கள் புகை அலாரங்களைச் சோதித்துப் பாருங்கள்.**

- உங்கள் புகை அலாரங்களில் ஏதேனும் ஒன்று ஓராண்டு நீடிக்கும் மின்கலத்தைக் கொண்டிருந்தால், அதனை ஒவ்வோராண்டும் மாற்றுவதை நிச்சயப்படுத்துங்கள். மாற்றீடு செய்யவேண்டிய தேவை ஏற்பட்டால் மட்டுமே மின்கலத்தை வெளியே எடுக்கவேண்டும்.
- அலாரம் தவறுதலாக ஒலித்துவிட்டால், ஒருபோதும் இணைப்பைத் துண்டிக்கவோ மின்கலங்களை வெளியே எடுக்கவோ வேண்டாம்.
- நியமதர மின்கலங்களில் இயங்கும் அலாரங்கள் அதிமலிவான தெரிவாக அமையும், ஆனால் ஒவ்வோராண்டும் மின்கலங்கள் மாற்றீடு செய்யப்படவேண்டும்.
- அனேகர் மின்கலங்களைப் பரீட்சித்துப் பார்க்க மறந்துவிடுகிறார்கள். ஆகவே நீண்ட ஆயுள் கொண்ட மின்கலங்கள் மேலானவை எனலாம்.
- மெயின்ஸ்-மின்சக்தியில் இயங்கும் அலாரங்கள் உங்கள் வீட்டுக்கு விநியோகமாகும் மின்சாரத்தில் இயங்குவன. அவை தேர்ச்சி பெற்ற மின்சாரவியலாளர் ஒருவரால் பொருத்தப்படவேண்டும். ஆயினும் மின்கல அலாரங்களைப் போலவே அவை பரீட்சிக்கப்படுவது அவசியம்.
- புகை அலாரங்களின் சோதனையின்போது புகை மோப்பப் பொறி, மின்சார விநியோகம் அத்துடன் / அல்லது மின்கலம் ஆகியனவும் சோதிக்கப்படும்.
- நீங்கள் ஒன்றுடனொன்று இணைக்கப்பட்ட அலாரங்களையும் பொருத்தி வைத்திருக்கலாம். இதன்படி அலாரம் ஒன்று தீயை மோப்பம் பிடிக்கும்போது அனைத்து அலாரங்களும் ஒருமித்து ஒலி எழுப்பும். நீங்கள் ஒரு பெரிய வீட்டில் அல்லது பல தளங்களில் பரவலாக வசிக்குமிடத்து இது பயனுள்ளதாக இருக்கும்.

செவிப்புலன் அற்றவர்களுக்கு அல்லது குறைந்தவர்களுக்கு 'ஸ்ட்ரோப்' எனும் எரிந்து அணையும் வெளிச்சமும், 'வைப்ரேட்டிங் பாட்' எனும் அதிர்வுகளை ஏற்படுத்தும் சாதனமும் கொண்ட அலாரங்கள் உள்ளன. Action on Hearing Loss Information Line எனும் அமைப்பை **0808 808 0123** என்கிற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளுங்கள். அல்லது **0808 808 9000** என்கிற இலக்கத்துக்கு எழுத்துச் சேதி அனுப்புங்கள்.


**Top tip**

**சிறந்த உதவிக் குறிப்பு**



**Test it**

**அதனைப் பரீட்சித்துப் பாருங்கள்**





# Fitting your smoke alarms

**The ideal position is on the ceiling, in the middle of a room, and on the hallway and landing, so you can hear an alarm throughout your home.**

- Don't put alarms in or near kitchens or bathrooms where smoke or steam can set them off by accident.
- If it is difficult for you to fit smoke alarms yourself contact your local fire and rescue service for help. They'll be happy to install them for you.

# உங்கள் புகை அலாரங்களைப் பொருத்துதல்

**பொருத்தமான இடம் சீலிங், அறை ஒன்றின் நடுப்பகுதி மற்றும் நடைமண்டபம் இறங்குமிடம் என்பனவாகும். இதனால் அலார ஒலி வீடு முழுவதும் கேட்கும்.**

- சமையலறைகள் அல்லது குளியலறைகளில் அல்லது அவற்றுக்கு அருகே அலாரங்களைப் பொருத்தாதீர்கள். ஏனெனில் அவற்றிலிருந்து வரும் புகை அல்லது நீராவி தற்செயலாக அலார ஒலியைத் தூண்டிவிடலாம்.
- புகை அலாரங்களை நீங்களாகவே பொருத்துவது உங்களுக்குச் சிரமமாக இருந்தால், உதவிக்கு உள்ளூர் தீயணைப்பு மற்றும் மீட்பு சேவையினருடன் தொடர்பு கொள்ளவும். அவற்றை உங்களுக்குப் பொருத்தித் தருவது அவர்களுக்கு மகிழ்ச்சியே.







## Looking after your smoke alarms

- Make testing your smoke alarms part of your regular household routine.
- Test them by pressing the button until the alarm sounds. If it doesn't sound, you need to replace the battery.
- If a smoke alarm starts to beep on a regular basis, you need to replace the battery immediately.
- If it is a ten year alarm, you will need to replace the whole alarm every ten years.

## Other equipment you could consider

- Fire blankets are used to put out a fire or wrap a person whose clothes are on fire. They are best kept in the kitchen.
- Fire extinguishers shoot out a jet to help control a fire. They are quick and simple to use, but always read the instructions first.
- Heat alarms can detect fires in kitchens where smoke alarms should not be placed.

## உங்கள் புகை அலாரங்களைப் பராமரித்தல்


- உங்கள் வழமையான வீட்டு வேலைகளில் ஒரு பகுதியாக புகை அலாரங்களைச் சோதித்தலை அமைத்துக் கொள்ளுங்கள்.
- அலார ஒலி எழும்பும்வரை பித்தானை அழுத்துவதன் மூலம் அவற்றைச் சோதித்துப் பாருங்கள். அலாரம் ஒலி எழுப்பாவிட்டால் மின்கலத்தை மாற்றீடு செய்வது அவசியமாகிறது.
- புகை அலாரம் ஒன்று ஒழுங்கான முறையில் 'பீப்' என்கிற ஒலியை எழுப்புமானால் மின்கலத்தை உடனடியாக மாற்றீடு செய்வது அவசியம்.
- பத்து ஆண்டு அலாரமாக இருந்தால், பத்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை முழு அலாரத்தையும் மாற்றீடு செய்யவேண்டும்.

## நீங்கள் கவனத்தில் கொள்ளக்கூடிய இதர சாதனங்கள்


- தீயை அணைப்பதற்கு, அல்லது ஆடையில் தீப்பற்றிய ஆளொருவரைப் போர்த்துவதுற்கு தீயணைப்புக் கம்பளங்கள் பயன்படுத்தப்படுவன. அவற்றை வைக்கக்கூடிய மிகச்சிறந்த இடம் சமையலறையாகும்.
- தீயணைப்புக் கருவிகள் தீயைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர உதவியாக பீற்றுவளி விசை ஒன்றைப் பாய்ச்சுகின்றன. அவை துரிதமாகவும் இலகுவாகவும் பயன்படுத்தப்படக்கூடியவை. ஆயினும் அதற்கான அறிவுறுத்தல்களை முதலில் வாசிக்கவும்.
- புகை அலாரங்கள் பொருத்தப்படக்கூடாத சமையலறைகளில் தீயபாயத்தைக் கண்டுபிடிக்கும் ஆற்றல், உஷ்ண அலாரங்களுக்கு உண்டு.



**Test it**
அதனைப் பரீட்சித்துப் பாருங்கள்



**Change it**
அதனை மாற்றுங்கள்



**Replace it**
அதனை மாற்றீடு செய்யுங்கள்



# HOW TO PREVENT COMMON FIRES

IN THE KITCHEN
ELECTRICS
CIGARETTES
CANDLES

**This section will tell you how you can avoid fires in your home, including how to cook safely and take care with electrics, heaters, candles and cigarettes.**

சமையலறையில் பொதுவாக ஏற்படக்கூடிய தீயபாயங்களை எப்படித் தடுப்பது மின்சாரம் சிகரெட்டுக்கள் மெழுகுவர்த்திகள்

உங்கள் வீட்டில், எவ்வாறு பாதுகாப்பாகச் சமைக்கலாம் மற்றும் எவ்வாறு மின்சார சாதனங்கள் சூடேற்றிகள், மெழுகுவர்த்திகள் மற்றும் சிகரெட்டுக்களைக் கவனமாகக் கையாளலாம் என்பன உட்பட, தீப்பிடித்தலை எவ்வாறு தடுக்கலாம் என்று இந்தப் பிரிவு உங்களுக்கு எடுத்துரைக்கும்.


# In the kitchen

## Cook safely

**Take extra care if you need to leave the kitchen whilst cooking, take pans off the heat or turn them down to avoid risk.**


- Avoid cooking when under the influence of alcohol.
- Avoid leaving children in the kitchen alone when cooking on the hob. Keep matches and sauce pan handles out of their reach to keep them safe.
- Make sure saucepan handles don't stick out – so they don't get knocked off the stove.
- Take care if you're wearing loose clothing – they can easily catch fire.
- Keep tea towels and cloths away from the cooker and hob.
- Spark devices are safer than matches or lighters to light gas cookers, because they don't have a naked flame.
- Double check the cooker is off when you've finished cooking


**Top tip**
சிறந்த உதவிக் குறிப்பு



**Keep out of reach**

கைக்கெட்டாதவாறு வைத்திருக்கவும்





## Take care with electrics

- Keep electrics (leads and appliances) away from water.
- Check toasters are clean and placed away from curtains and kitchen rolls.
- Keep the oven, hob and grill clean and in good working order. A build up of fat and grease can ignite a fire.

**Don't put anything metal in the microwave**

## Deep fat frying

- Take care when cooking with hot oil – it sets alight easily.
- Make sure food is dry before putting it in hot oil so it doesn't splash.
- If the oil starts to smoke – it's too hot. Turn off the heat and leave it to cool.
- Use a thermostat controlled electric deep fat fryer. They can't overheat.

## What to do if a pan catches fire

- Don't take any risks. Turn off the heat if it's safe to do so. Never throw water over it.
- Don't tackle the fire yourself.

**GET OUT**
**STAY OUT**
**AND CALL**
**999**





# சமையலறையில்

## பாதுகாப்பாகச் சமைக்கவும்

**சமைக்கும்போது சமையலறையிலிருந்து வெளியே செல்லவேண்டியிருந்தால் விசேட கவனம் எடுங்கள். ஆபத்தைத் தவிர்க்கும் பொருட்டு, சமையல் பாத்திரங்களை கொதிக்கும் நிலையிலிருந்து அகற்றுங்கள் அல்லது சூட்டைத் தணியுங்கள்.**

- மதுபோதையிலிருந்தால், சமையல் செய்வதைத் தவிருங்கள்.
- 'ஹொப்' சூட்டடுப்பில் சமையல் செய்யும்போது சமையலறையில் பிள்ளைகளைத் தனியே விடாதீர். அவர்களின் பாதுகாப்பு நிமித்தம் தீக்குச்சிகள் மற்றும் உலோக வேவுகலங்களின் கைப்பிடிகளை அவர்கள் கைக்கெட்டாதவாறு வைத்திருங்கள்.
- உலோக வேவுகலங்களின் கைப்பிடிகள் வெளியே நீட்டாதிருப்பதை நிச்சயப்படுத்தவும் - இதனால் அவை அடுப்பிலிருந்து தட்டி வீழ்த்தப்படமாட்டா.
- தளர்ந்த ஆடை அணிந்திருந்தால் கவனமாக இருக்கவும் - அதில் இலகுவில் தீப்பற்றலாம்.
- தேனீர்த் துவாய்கள் மற்றும் துணிகளை பொறியடுப்பிலிருந்தும் 'ஹொப்' பொறியடுப்பிலிருந்தும் தள்ளி வைக்கவும்.
- வாயு அடுப்புக்களைப் பற்றவைக்க, தீக்குச்சிகள் அல்லது லைட்டர்களை விட, பொறி உண்டாக்கித் தீப்பற்றவைக்கும் சாதனங்கள் பாதுகாப்பானவை. ஏனெனில் அவை தீச்சுவாலைகளை ஏற்படுத்தமாட்டா.
- சமையல் முடிந்ததும் பொறியடுப்பு அணைந்துவிட்டதா என்று ஒன்றுக்கு இரண்டு தடவை சோதனை செய்து பார்க்கவும்

## மின்சாதனங்களைக் கவனமாகக் கையாளவும்.

- மின்சாதனங்களை (சொருகுதலைகள் மற்றும் கருவிகள்) நீர் படாது அகற்றி வைக்கவும்.
- 'டோஸ்டர்' சாதனங்கள் சுத்தமாக, ஜன்னல் திரைகள் மற்றும் சமையலறைத் துடைக்கும் காகிதச் சுருள்களிலிருந்து தள்ளி வைக்கப்படுள்ளனவா என்று சோதிக்கவும்.
- வெதுப்பகம், 'ஹொப்' மற்றும் 'க்றில்' சாதனங்களை சுத்தமாகவும் செம்மையாக இயங்கும் நிலையிலும் வைத்திருங்கள். கொழுப்பும் 'கிறீஸ்' உம் செறிந்தால் தீப்பற்றக்கூடும்.

**'மைக்ரோவேவ்' இல் உலோகம் எதனையும் இடவேண்டாம்.**


## கொழுப்பில் ஆழப் பொரித்தல்

- கொதிக்கும் எண்ணெயில் சமைக்கும்போது கவனமாக இருங்கள் - அது இலகுவாகப் பற்றி எரியக்கூடியது.
- கொதிக்கும் எண்ணெயில் உணவை இடும்போது எண்ணெய் வெளியே சிதறாதிருப்பதற்காக அது உலர்ந்த உணவாக இருப்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளவும்.
- எண்ணெய் புகையத் தொடங்கினால் - அது அளவு மீறிக் கொதிக்கிறது எனலாம். சூட்டை நிறுத்திவிட்டு எண்ணெயை ஆறிக்குளிர விடவும்.
- வெப்பச் சீர்நிலையைக் கட்டுப்படுத்தும் பொறி அமைந்த, கொழுப்பில் ஆழப் பொரிக்கும் பொரிகலனைப் பயன்படுத்தவும். அதில் அளவு மீறிய சூடு ஏற்படமாட்டாது.

## பாத்திரத்தில் தீப்பிடித்தால் என்ன செய்வது

- ஆபத்து ஏற்படக்கூடிய செயல் எதிலும் ஈடுபடாதீர் பாதுகாப்பாகச் சூட்டை நிறுத்த முடியுமானால் அவ்வாறு செய்யவும். அதன்மீது நீரை ஊற்றாதீர்.
- நீங்களாகவே தீயை அணைக்க முற்படாதீர்.






**வெளியேறுங்கள்**
**வெளியே**
**நில்லுங்கள்**
**அத்துடன்**
**அழையுங்கள்**
**999**



# Electrics

## How to avoid electrical fires


- Always check that you use the right fuse to prevent overheating.
- Make sure an electrical appliance has a British or European safety mark when you buy it.
- Certain appliances, such as washing machines, should have a single plug to themselves, as they are high powered.
- Try and keep to one plug per socket.
- When charging electrical goods, follow the manufacturer's instructions and look for the CE mark that indicates chargers comply with European safety standards.


# மின்சார சாதனங்கள்

## மின்சாரத்தினால் ஏற்படும் தீயபாயங்களைத் தவிர்ப்பது எப்படி

- அளவு மீறிய சூட்டைத் தடுக்கும் சரியான 'பியூஸை'ப் பயன்படுத்துகிறீர்களா என்று சோதித்துப் பாருங்கள்.
- மின்சார சாதனம் ஒன்றை வாங்கும்போது அதில் பிரித்தானிய அல்லது ஐரோப்பிய பாதுகாப்புக் குறி உள்ளதா என்று நிச்சயப்படுத்தவும்.
- சலவை எந்திரங்கள் போன்ற சில சாதனங்கள் அதிக சக்தி கொண்டவை என்பதால் அவற்றுக்குத் தனிச் சொருகுதலை இருத்தல் வேண்டும்.
- மின்குழிவு ஒன்றுக்கு ஒரு சொருகுதலையை வைத்திருக்க முயற்சிக்கவும்.
- மின் உபகரணங்களை வலுவூட்டும்போது (சார்ஜ் செய்தல்) தயாரிப்பாளர்களது அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும். அத்துடன் வலுவூட்டல் கருவிகள் ஐரோப்பிய பாதுகாப்புத் தரங்களுக்கு ஏற்றவை என்று காட்டும் CE குறி இருக்கிறதா என்று பார்க்கவும்.

### Top tip
### சிறந்த உதவிக் குறிப்பு






**Don't overload**

**அதிக பளு ஏற்றாதீர்**

**5 AMP + 5 AMP + 3 AMP = 13 AMP**



## Know the limit!

**An extension lead or adaptor will have a limit to how many amps it can take, so be careful not to overload them to reduce the risk of a fire.**

**Appliances use different amounts of power – a television may use a 3amp plug and a vacuum cleaner a 5amp plug for example.**

## வரம்பை அறிந்திருக்கவும்

**நீள்சொருகுதலை அல்லது பல் சொருகுதலை (அடாப்டர்) ஒன்று, அது கொள்ளக்கூடிய 'அம்ப்'பின் வரம்பைக் கொண்டிருக்கும். ஆகவே தீயபாயத்தைக் குறைக்கும் பொருட்டு அதற்கு அளவு மீறிப் பளு (ஓவர்லோட்) ஏற்றாதிருப்பது குறித்துக் கவனமாக இருக்கவும்.**

**சாதனங்கள் வேறுபட்ட மின்சக்தியைப் பயன்படுத்துவன – உதாரணமாக தொலைக்காட்சி ஒன்று 3 'அம்ப்' சொருகுதலையையும் மின்துடைப்பம் ஒன்று 5 'அம்ப்' சொருகுதலையையும் பயன்படுத்தக் கூடும்.**



**Keep electrical appliances clean and in good working order to prevent them triggering a fire.**

- Keep your eyes peeled for signs of dangerous or loose wiring such as scorch marks, hot plugs and sockets, fuses that blow or circuit-breakers that trip for no obvious reasons, or flickering lights.
- Check and replace any old cables and leads, especially if they are hidden from view – behind furniture or under carpets and mats.
- Unplugging appliances helps reduce the risk of fire.
- Unplug appliances when you're not using them or when you go to bed.

## Portable heaters

- Try to secure heaters up against a wall to stop them falling over.
- Keep them clear from curtains and furniture and never use them for drying clothes.

## Using an electric blanket

- Store electric blankets flat, rolled up or loosely folded to prevent damaging the internal wiring.
- Unplug blankets before you get into bed, unless it has a thermostat control for safe all-night use.
- Try not to buy second hand blankets and check regularly for wear and tear.
- Always follow the manufacturer's instructions.

## Furniture

- Always ensure that your furniture has the fire-resistant permanent label.




**மின்சாதனங்களை, அவற்றால் தீயபாயம் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு, சுத்தமாகவும் செம்மையாக இயங்கும் நிலையிலும் வைத்திருங்கள்.**

- எரிவு ஏற்பட்ட குறிகள், சூடேறிய சொருகுதலைகள் மற்றும் மின்குழிவுகள், எரிந்த 'பியூஸ்'கள் அல்லது காரணமில்லாமல் மின்விநியோகத்தை நிறுத்தும் மின்சுற்றுத் தடங்கள், அல்லது மங்கி மங்கி எரியும் வெளிச்சங்கள் போன்ற ஆபத்தான அல்லது இறுக்கமற்ற மின்கம்பி இணைப்புக்கள் குறித்து விழிப்பாக இருக்கவும்.
- பழைய கேபிள்களையும் சொருகுதலைகளையும் - குறிப்பாக அவை தளபாடங்கள், அல்லது நிலவிரிப்புகள் பாய்களுக்குக் கீழ் மறைவாக இருந்தால், சோதித்து மாற்றீடு செய்யவும்.
- சாதனங்களை மின்குழிவுகளிலிருந்து நீக்கிவிடுவது தீயபாயத்தைக் குறைப்பதாக இருக்கும்.
- சாதனங்களைப் பயன்படுத்தாதபோது அல்லது படுக்கைக்குச் செல்லும்போது அவற்றை மின்னிணைப்பிலிருந்து நீக்கிவிடுங்கள்.

## காவிச் செல்லக்கூடிய சூடேற்றிகள்

- சூடேற்றிகளை, அவை சரிந்து விழாது தடுக்க, ஒரு சுவருடன் பாதுகாப்பாக நிறுத்தி வைக்க முயற்சிக்கவும்.
- அவற்றை ஜன்னல் திரை மற்றும் தளபாடங்களிலிருந்து விலக்கி வைக்கவும். அவற்றை ஒருபோதும் துணிகளைக் காயவைப்பதற்குப் பயன்படுத்தாதீர்.

## மின்சாரப் போர்வையைப் பயன்படுத்தல்

- மின்சாரப் போர்வைகளை, அவற்றின் உள்ளகக் கம்பி இணைப்புகள் சேதமடைவதைத் தடுக்கும் பொருட்டு, விரித்தவாறு, சுருட்டி அல்லது நெகிழ்ச்சியாக மடித்து வைத்திருக்கவும்.
- போர்வைகளை, முழு-இரவுப் பாதுகாப்புக்கென அவற்றில் வெப்பச் சீர்நிலைக் கட்டுப்பாடு இருந்தாலொழியப், படுக்கைக்குச் செல்லுமுன் மின்னிணைப்பிருந்து நீக்கிவிடுங்கள்.
- ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட போர்வைகளை வாங்காதுவிட முயற்சி செய்யவும். அத்துடன் போர்வைகளுக்குப் பாவனைச் சேதாரம் ஏற்பட்டுள்ளதா என்று ஒழுங்காகச் சோதிக்கவும்.
- எப்போதும் தயாரிப்பாளரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

## தளபாடங்கள்

- உங்கள் தளபாடங்கள் நிரந்தர தீ எதிர்ப்பு லேபல் கொண்டவையாக இருத்தல் வேண்டும் என்பதை எப்போதும் நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

## Cigarettes

## சிகரெட்டுக்கள்

**Stub cigarettes out properly and dispose of them carefully.
Put them out. Right out!**

- Never smoke in bed.
- Use a proper ashtray – never a wastepaper basket.
- Make sure your ashtray can't tip over and is made of a material that won't burn.
- Don't leave a lit cigarette, cigar or pipe lying around. They can easily fall over and start a fire.
- Take extra care if you smoke when you're tired, taking prescription drugs, or if you've been drinking. You might fall asleep and set your bed or sofa on fire.
- Keep matches and lighters out of children's reach.
- Consider buying child resistant lighters and match boxes.

**சிகரெட்டுக்களை முறையாக அணைத்துக் கவனமாக அப்புறப்படுத்தவும். அவற்றை அணைத்துவிடுங்கள். முறையாக அணைத்துவிடுங்கள்!**

- படுக்கையில் ஒருபோதும் புகைக்கவேண்டாம்.
- முறையான சாம்பர் தட்டைப் பயன்படுத்தவும் - கழிவுக் காகிதக் கூடையை அல்ல.
- உங்கள் சாம்பர் தட்டு சரிந்து விழாதிருப்பதையும் அது எரியாத பொருள் கொண்டு தயாரிக்கப்பட்டிருப்பதையும் நிச்சயப்படுத்திக்கொள்ளவும்.
- எரியும் சிகரெட், சுருட்டு அல்லது சுங்கானைக் கண்டவாறு கிடக்கவிடாதீர். அவை இலகுவாகச் சரிந்து விழுந்து தீவிபத்து ஒன்றை ஆரம்பிக்கக் கூடியவை.
- நீங்கள் களைப்புற்றிருக்கும்போது, மருத்துவர் சொன்ன மருந்துகளை எடுக்கும்போது அல்லது மது அருந்தியிருக்கும்போது புகைப்பதானால் விசேட கவனத்துடன் அதனைச் செய்யவும். உங்களுக்குத் உறக்கம் வந்து உங்கள் படுக்கையை அல்லது சோபாவைப் பற்றவைத்துவிடக்கூடும்.
- தீக்குச்சிகளையும் லைட்டர்களையும் பிள்ளைகளுக்கு எட்டாதவாறு வைத்திருக்கவும்.
- பிள்ளைகள் கையாள முடியாத லைட்டர்களையும் தீப்பெட்டிகளையும் வாங்குவது பற்றிச் சிந்திக்கவும்.








**Put them out. Right out!**

அவற்றை அணைத்துவிடுங்கள். முறையாக அணைத்துவிடுங்கள்!

**Matchboxes now carry this warning label**




**தீப்பெட்டிகளில் தற்போது இந்த எச்சரிக்கை லேபல் காணப்படுகிறது**



## Candles

## மெழுகுவர்த்திகள்

**Make sure candles are secured in a proper holder and away from materials that may catch fire – like curtains.**

- Put candles out when you leave the room, and make sure they're put out completely at night.
- Children shouldn't be left alone with lit candles.
- Keep pets away from lit candles.

**மெழுகுவர்த்திகள் முறையானதொரு ஏந்துகோலில் இறுக்கமாகப் பொருத்தப்பட்டு - ஜன்னல் திரைகள் போன்ற தீப்பற்றக்கூடிய பொருட்களிலிருந்து தொலைவில் வைக்கப்படுவதை நிச்சயப்படுத்திக் கொள்ளவும்.**

- அறையிலிருந்து வெளியேறுகையில் மெழுகுவர்த்திகளை அணைத்து விடவும். இரவில் அவை முற்றாக அணைக்கப்பட்டிருப்பதை நிச்சயப்படுத்தவும்.
- எரியும் மெழுகுவர்த்திகளுடன் பிள்ளைகளைத் தனியே விடலாகாது.
- செல்லப் பிராணிகள் எரியும் மெழுகுவர்த்திகளிடமிருந்து ஒதுக்கி வைத்திருக்கப்படவேண்டும்.






**Be careful with candles**

மெழுகுவர்த்திகளைக் கவனமாகக் கையாளவும்



# PLAN A SAFE ESCAPE

# பாதுகாப்பாகத் தப்பிச் செல்லும் வழியைத் திட்டமிடவும்

**Fitting smoke alarms is the first crucial step to protecting yourself from fire. But what would you do if one went off during the night?**

**This section will help you make a plan ready for an emergency.**

உங்களைத் தீயிலிருந்து பாதுகாப்பதற்கான முதலாவது முக்கிய படி புகை அலாரங்களைப் பொருத்துவதே. ஆனால் புகை அலாரம் ஒன்று இரவு வேளையில் ஒலித்தால் என்ன செய்வீர்கள்?

இந்தப் பிரிவு, அவசரநிலை ஒன்றின்போது தயாராகவிருக்கத் திட்டம் ஒன்றைத் தீட்ட உங்களுக்கு உதவும்.




## Be prepared by making a plan of escape

- Plan an escape route and make sure everyone knows how to escape.
- Make sure exits are kept clear.
- The best route is the normal way in and out of your home.
- Think of a second route in case the first one is blocked.
- Take a few minutes to practise your escape plan.
- Review your plan if the layout of your home changes.


## தப்பிச்செல்லும் திட்டம் ஒன்றைத் தயாரித்து ஆயத்தமாக இருக்கவும்

- தப்பிச் செல்லும் பாதை ஒன்றைத் தயாரித்து, அத்துடன் எப்படித் தப்பிச் செல்வது என்று ஒவ்வொருவரும் அறிந்திருப்பதை நிச்சயப்படுத்தவும்.
- வெளியே செல்லும் வழிகள் வெற்றிடமாக இருப்பதை நிச்சயப்படுத்தவும்.
- மிகச் சிறந்த வழி உங்கள் வீட்டுக்கு வழமையாக வந்து போகும் வழியாகும்.
- முதலாவது வழி தடைப்பட்டால் பயன்படுத்த இரண்டாவது வழி ஒன்றை ஏற்படுத்துவது பற்றிச் சிந்திக்கவும்.
- உங்கள் தப்பிச் செல்லும் திட்டத்தை பயிற்சி செய்து பார்ப்பதில் சில நிமிடங்களைச் செலவிடவும்.
- உங்கள் வீட்டின் அமைப்பில் மாற்றம் ஏற்பட்டால், திட்டத்தை மீளாய்வு செய்யவும்.



**Top tip**
சிறந்த உதவிக் குறிப்பு





**Plan an escape route**

தப்பிச் செல்லும் பாதை ஒன்றைத் திட்டமிடவும்

**Keep door and window keys where everyone can find them**

கதவு மற்றும் ஜன்னல் திறப்புக்களை ஒவ்வொருவரும் காணக்கூடியதான இடத்தில் வைக்கவும்.

## What to do if there is a fire

## தீப்பிடித்துவிட்டால் என்ன செய்வது

**Don't tackle fires yourself. Leave it to the professionals.**

- Keep calm and act quickly, get everyone out as soon as possible.
- Don't waste time investigating what's happened or rescuing valuables.
- If there's smoke, keep low where the air is clearer.
- Before you open a door check if it's warm. If it is, don't open it – fire is on the other side.
- Call 999 as soon as you're clear of the building. 999 calls are free.

**நீங்களாகவே தீயைக் கையாளாதீர். அதனைத் தொழில்சார் நிபுணர்கள் கையில் விட்டுவிடவும்.**

- அமைதியாக இருந்து துரிதமாகச் செயலாற்றவும், ஒவ்வொருவரையும் இயலுமான அளவுக்கு விரைவாக வெளியேற்றவும்.
- என்ன நடந்தது என்று புலன்விசாரிப்பதிலும் மதிப்பு வாய்ந்த பொருட்களை மீட்பதிலும் நேரத்தை விரயமாக்காதீர்.
- புகைமயமாகக் காணப்பட்டால் காற்றுச் சீராகக் காணப்படும் இடத்தில் அமைதியாக இருங்கள்.
- கதவு ஒன்றைத் திறப்பதற்குமுன் அது சூடாக இருக்கிறதா என்று சோதியுங்கள். அவ்வாறு இருந்தால் கதவைத் திறக்கவேண்டாம் - மறுபக்கத்தில் தீப்பற்றியுள்ளது.
- கட்டடத்திலிருந்து வெளியேறியதும் 999 என்கிற இலக்கத்தை அழைக்கவும். 999 அழைப்புக்கள் இலவசம்.

### Top tip
### சிறந்த உதவிக் குறிப்பு




**Get out, stay out and call 999**

**வெளியேறுங்கள், வெளியே நில்லுங்கள் 999ஐ அழையுங்கள்**



## What to do if your escape is blocked


## உங்கள் தப்பிச் செல்லும் வழி தடைப்பட்டிருந்தால் என்ன செய்வது

**If you can't get out, get everyone into one room, ideally with a window and a phone.**


- Put bedding around the bottom of the door to block out the smoke.
- Call 999 then open the window and shout "HELP FIRE".
- If you're on the ground or first floor, you may be able to escape through a window.
- Use bedding to cushion your fall and lower yourself down carefully. Don't jump.
- If you can't open the window break the glass in the bottom corner. Make jagged edges safe with a towel or blanket.

**உங்களால் வெளியேற இயலாமல் போனால் ஒவ்வொருவரையும், ஒரு ஜன்னல் மற்றும் ஒரு தொலைபேசி உள்ள அறை ஒன்றினுள் ஒன்று சேர்க்கவும்.**

- கதவின் அடிப்பகுதியில் படுக்கைச் சாமான்களைத் திணித்து புகை உள்ளே வருவதைத் தடுக்கவும்.
- 999க்கு அழைப்பு எடுத்துவிட்டு ஜன்னலைத் திறந்து "உதவுங்கள் தீவிபத்து" என்று உரத்த குரலில் கத்தவும்.
- நீங்கள் நிலத் தளத்தில் அல்லது முதல் மாடியில் இருந்தால் ஜன்னல் ஒன்றின் வழியாகத் தப்பக்கூடியதாக இருக்கும்.
- நீங்கள் குதிக்கும்போதும் கீழே இறங்கும்போதும் கவனமாகப் படுக்கை விரிப்புக்களை மெத்தை மாதிரிப் பயன்படுத்தவும். பாயவேண்டாம்.
- ஜன்னலைத் திறக்க முடியாவிட்டால், அதன் அடிப்பகுதி மூலையில் கண்ணாடியை உடைக்கவும். கண்ணாடியின் கூர்மையான நுனிப் பகுதிகளை துவாலை அல்லது கம்பளம் ஒன்றைக் கொண்டு பாதுகாப்பானவையாக்கவும்.







# What to do if your clothes catch fire

# உங்கள் ஆடையில் தீப்பிடித்தால் என்ன செய்வது

- Don't run around, you'll make the flames worse.
- Lie down and roll around. It makes it harder for the fire to spread.
- Smother the flames with a heavy material, like a coat or blanket.
- Remember, Stop, Drop and Roll!

- அங்குமிங்கும் ஓடாதீர், தீச்சுவாலைகளை மோசமாக்கி விடுவீர்கள்.
- கீழே விழுந்து புரளவும். இதனால் தீ பரவுதலில் தடங்கல் ஏற்படும்.
- கோட் அல்லது கம்பளம் போன்ற பாரமான துணிகளைக் கொண்டு தீச்சுவாலைகளைப் அழுத்தி நிறுத்தவும்.
- நினைவில் வைத்திருங்கள், நில்லுங்கள், விழுங்கள் உருண்டு புரளுங்கள்!




**STOP!**

நில்லுங்கள்!



**DROP!**

விழுங்கள்!



**ROLL!**

உருண்டு புரளுங்கள்!



# How to escape from a high level building


# ஓர் உயரமான கட்டடத்திலிருந்து எப்படித் தப்புவது

- As with all buildings, you should plan and practise an escape route.
- Avoid using lifts and balconies if there is a fire.
- It is easy to get confused in smoke, so count how many doors you need to go through to reach the stairs.
- Check there is nothing in the corridors or stairways that could catch fire – like boxes or rubbish.
- Make sure doors to stairways are not locked.
- Make sure everyone in the building knows where the fire alarms are.
- You should still get a smoke alarm for your own home, even if there is a warning system in the block.

- அனைத்துக் கட்டடங்களிலும் செய்வது போலவே தப்பும் வழி ஒன்றைத் தயாரித்துப் பழகுதல் வேண்டும்.
- தீயபாயம் ஏற்பட்டால் இயங்கேணிகள் (லிப்ட்டுக்கள்) மற்றும் மொட்டை மாடிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.
- புகையின் மத்தியில் குழப்பம் ஏற்படுவது சுலபம். ஆகவே படிக்கட்டுக்களை அடைவதற்கு எத்தனை கதவுகளைத் தாண்டவேண்டும் என்று கணக்கிடவும்.
- தீப்பிடிக்கக்கூடிய பெட்டிகள் குப்பைகள் போன்ற எவையும் நடைபாதைகள் அல்லது படிக்கட்டுக்களில் இருக்கலாகாது. இதனைச் சோதித்துக் கொள்ளவும்.
- படிக்கட்டுக்களுக்கு இட்டுச் செல்லும் கதவுகள் பூட்டப்படாது இருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவும்.
- கட்டடத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும், தீயபாய அலாரங்கள் எங்கே உள்ளன என்று தெரிந்திருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவும்.
- உங்கள் வீட்டுக் கட்டடத் தொகுதியில் எச்சரிக்கைப் பொறி ஒன்று இருந்தபோதிலும் உங்கள் வீட்டுக்கு புகை அலாரம் ஒன்றை நீங்கள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.



வெற்றிடமாக வைத்திருங்கள்



# MAKE A BEDTIME CHECK

# படுக்கை நேரம் சோதியுங்கள்

**You are more at risk from a fire when asleep. So it's a good idea to check your home before you go to bed.**

உங்களுக்கு உறக்கத்தில் தீயபாயம் கூடுதலாக இருக்கும். ஆகவே நீங்கள் படுக்கைக்குச் செல்லுமுன் வீட்டைச் சோதிப்பது நல்லது.






## Check list

## சோதனைப் பட்டியல்


| Check list | | சோதனைப் பட்டியல் | |
|---|---|---|---|
| Close inside doors at night to stop a fire from spreading. | ☐ | தீ பரவுவதைத் தடுக்கும்பொருட்டு இரவு வேளையில் உட்கதவுகளை மூடிவிடவும். | ☐ |
| Turn off and unplug electrical appliances unless they are designed to be left on – like your freezer. | ☐ | மின்சார சாதனங்களை, அவை – ஆழ்குளிரூட்டி போல எப்போதும் மின்சார இணைப்பில் இருக்கக்கூடியதாக வடிவமைக்கப்பட்டிருந்தாலொழிய, அவற்றின் இணைப்பை நீக்கி, சொருகுதலையை அகற்றிவிடவும். | ☐ |
| Check your cooker is turned off. | ☐ | உங்கள் பொறியடுப்பின் மின்னிணைப்பு நீக்கப்பட்டுள்ளதா என்று சோதிக்கவும். | ☐ |
| Don't leave the washing machine on. | ☐ | சலவை எந்திரத்தை மின்னிணைப்பில் விட்டுச் செல்லாதீர். | ☐ |
| Turn heaters off and put up fireguards. | ☐ | சூடேற்றிகளை மின்னிணைப்பிலிருந்து நீக்கிவிட்டுத் தீக்கவசங்களை இடவும். | ☐ |
| Put candles and cigarettes out properly. | ☐ | மெழுகுவர்த்திகள் மற்றும் சிகரெட்டுக்களைச் சரியான முறையில் அணைத்துவிடுங்கள். | ☐ |
| Make sure exits are kept clear. | ☐ | வெளியேறும் வழிகளில் தடங்கல்கள் இல்லாதிருப்பதை நிச்சயப்படுத்துங்கள். | ☐ |
| Keep door and window keys where everyone can find them. | ☐ | கதவு மற்றும் ஜன்னல் திறப்புக்களை ஒவ்வொருவரும் கண்டெடுக்கக்கூடிய இடத்தில் வைக்கவும். | ☐ |

### Top tip
### சிறந்த உதவிக் குறிப்பு




**Close inside doors at night**

இரவில் உட்கதவுகளை மூடவும்



# SMOKE ALARMS SAVE LIVES

# புகை அலாரங்கள் உயிர்களைக் காப்பாற்றும்

In the event of a fire, get out, stay out and call 999. For further fire safety information contact your local fire and rescue service (not 999). Or visit www.facebook.com/firekills

தீப்பிடித்தால், வெளியேறுங்கள், வெளியே நில்லுங்கள், 999ஐ அழையுங்கள். தீயபாயப் பாதுகாப்பு பற்றிய மேலதிக தகவல்களுக்கு உங்கள் உள்ளூர் தீயணைப்பு மற்றும் மீட்பு சேவையினருடன் தொடர்பு கொள்ளவும் (999 உடன் அல்ல). அல்லது நாடவும்
www.facebook.com/firekills

Crown Copyright 2017.

Published by the Home Office, June 2017.

Version 3

©முடிக்குரிய அரச பதிப்புரிமை 2017 பெற்றது.

உள்விவகாரத் துறையினால் 2017 ஜூன் மாதம் வெளியிடப்பட்டது.

பதிப்பு 3